අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/04/60/01/ව.ස්.මං.(2025) ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2025.02.

அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,
அனைத்து தேசிய பாடசாலை அதிபர்களுக்கு,

**<u>2025 தேசிய பாடசாலைகளில் பணியாற்றும் இலங்கை அதிபர் சேவை அதிகாரிகளுக்கான வருடாந்த இடமாற்ற விண்ணப்பம் கோரல்</u>**

1. இலங்கை அதிபர் சேவையின் அதிகாரிகளுக்கான வருடாந்த இடமாற்றம் - 2025 இன் கீழ், தேசிய பாடசாலைகளின் அதிபர்களை இடமாற்றம் செய்வதற்கான விண்ணப்பங்களை இணையவழி முறை மூலம் கோருவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இடமாற்றங்களை செயற்படுத்துவது தொடர்பான பின்வரும் ஆலோசனை வழிகாட்டிக் கையேடு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

   இந்த இடமாற்றம் 02 பிரதான பகுதிகளைக் கொண்டது

### 1.1 முதலாம் பகுதி : கட்டாய அதிபர் இடமாற்றம்

1.1.1. தற்போது நிரந்தரமாகப் பணியாற்றி வரும், தேசிய பாடசாலைகளில் 2024.12.31 ஆம் திகதியன்று 06 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யும், 58 வயதுக்குக் குறைவான, இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த அதிகாரிகள், வருடாந்த இடமாற்றச் செயன்முறைக்கு உட்படுவர்.

1.1.2. சேவைக் காலத்தைக் கணிப்பிடும் போது, தனிப்பட்ட தேவைகளுக்காகப் பெற்றுக்கொண்டுள்ள தற்காலிக இணைப்பு, உள்நாட்டு / வெளிநாட்டு சம்பளத்துடன் கூடிய / சம்பளமற்ற விடுமுறை போன்றவையும் சம்பளம் பெறும் பாடசாலையின் சேவைக் காலத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டும்.

1.1.3. கட்டாய இடமாற்றத்திற்குத் தகைமை பெற்றிருந்தும் கூட, அதிபர் சேவையிலுள்ள எந்தவோர் அதிகாரியும் குறிப்பிட்ட திகதிக்குள் இணையவழி முறை மூலம் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க வில்லையாயின், அதிபரினால் **PTB/2025/01** எனும் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு தனது பரிந்துரைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்தத் தகவல்களின் அடிப்படையில் அந்த அதிபர்களுக்கு அதிபர் இடமாற்றச் சபையினால் இடமாற்றம் வழங்கப்படும்.

### 1.2 <u>இரண்டாம் பகுதி : கட்டாய அதிபர் இடமாற்றம்</u>

**1.2.1** முதலாம் பகுதிக்குள் உட்படாத, எனினும் தங்களது தேவைகளின் அடிப்படையில் இடமாற்றத்தை எதிர்பார்க்கும் அதிபர்களும் விண்ணப்பம் ஒன்றினை முன்னிலைப்படுத்த முடியும்.

2. www.nspt.moe.gov.lk எனும் இணையதளத்தின் ஊடாக இணைய வழி மூலம் அதிபர்களுக்கான இடமாற்ற விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து, அதன் அச்சுப் பிரதியினை தமது பாடசாலையின் நிரந்தர அதிபரிடம் தங்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

   2.1 . இணைய வழி மூலம் அதிபர் இடமாற்ற விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய காலப்பகுதி 2025.02.25 திகதி தொடக்கம் 2025.03.11 வரையாகும். நிரந்தர அதிபரினால் அவ் அச்சிடப்பட்ட பிரதியில் தனது கையொப்பம் மற்றும் திகதியினை இட்டு 2025.03.14 அன்று அல்லது அதற்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

3. நிரந்தர அதிபருக்கு இணைய வழி மூலம் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் தொடர்பில் உங்களது பரிந்துரையினை www.nspt.moe.gov.lk எனும் இணைப்பின் மூலம் **Login as a Principal** எனும் உள்நுழைவு வழியாக இணையவழி மூலமாகவே சமர்ப்பித்தல் வேண்டும். அதிபர் இடமாற்ற விண்ணப்பங்கள் தொடர்பில் இணையவழி மூலம், நிரந்தர அதிபரினால் பரிந்துரைகளை வழங்குவதற்கான முடிவுத் திகதி 2025.03.14 ஆகும். இங்கு நிரந்தர அதிபரின் பரிந்துரையுடன் கூடிய விண்ணப்பப்படிவம் மற்றும் **PTB/2025/01**

எனும் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதிகளில் தங்களது கையொப்பம், திகதி மற்றும் பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

4. 2025.03.01 தொடக்கம் 2025.03.14 ஆம் திகதி வரை இணையவழி முறை மூலம் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்குமாறு அதிபர்களை அறிவுறுத்துதல், இணைய, கணினி வசதிகளை வழங்குதல் மற்றும் அதிபர் தாமே வருடாந்த இடமாற்ற விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியில் கையொப்பமிட்டு 2025.03.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிரந்தர அதிபரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதை அதிபர்களுக்கு அறிவுறுத்த வேண்டியது நிரந்தர அதிபரின் பொறுப்பாகும்.

5. ஒவ்வொரு அதிபரினதும் வருடாந்த இடமாற்ற விண்ணப்பத்துடன் மருத்துவச் சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவச் சான்றிதழ்கள் அரச மருத்துவமனை அல்லது பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவனை அல்லது நோயாளிக்கு சிகிச்சை அளிக்கும் விசேட வைத்திய நிபுணரினால் முறையாகச் சான்றளிக்கப்படல் வேண்டும்.

6. **நிரந்தர அதிபர்களினால் வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பிப்பது தொடர்பான ஆலோசனைகள்**

6.1 உங்கள் பாடசாலைக்கு உரிய வருடாந்த அதிபர் இடமாற்ற விண்ணப்பப்படிவத் தொகுதியைச் சமர்ப்பிக்கும் போது, பின்வரும் உப ஆவணங்களையும் தொடர் இலக்கத்தின் அடிப்படையில் இணைக்கவும்

**i.** பரிந்துரை செய்யப்பட்ட அதிபர் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்

**ii.** இடமாற்ற விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் அனைத்து அதிபர்களினதும் தகவல்கள் (www.nspt.moe.gov.lk இணைப்பின் மூலம் Login as a Principal எனும் உள்நுழைவு வழியாக நுழைந்து அனைத்து விண்ணப்பப் படிவங்களுக்கும் பரிந்துரையினை வழங்க முடியும்.)

இதற்காக பாடசாலைகளின் அதிபர்கள், வருடாந்த ஆசிரியர் இடமாற்ற தகவல் முறைமைக்குப் பிரவேசிப்பதற்காக தற்போது அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள **Username** மற்றும் **Password** இணைப் பயன்படுத்த முடியும்.

iii. **PTB/2025/01** உப அட்டவணை – தங்கள் பாடசாலையில் பணியாற்றும் 2024.12.31 ஆம் திகதியன்று 06 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்துடன், 58 வயதை விட குறைந்த இணையவழி முறை மூலமாக இடமாற்ற விண்ணப்பத்தினை முன்னிலைப்படுத்தாத அதிபர்களின் பெயர்ப்பட்டியல்

(இதன்கீழ் அதிபர்கள் இல்லாத பட்சத்தில் அது தொடர்பில் குறிப்பிடப்படல் வேண்டும்.)

7. **வலயக் கல்விப் பணிப்பாளரினால் வருடாந்த அதிபர் இடமாற்ற விண்ணப்பப்படிவம் கல்வி அமைச்சின் அதிபர் கிளைக்கு சமர்ப்பித்தல் தொடர்பான ஆலோசனைகள்**

7.1 உங்கள் வலயத்துக்கு உரிய வருடாந்த அதிபர் இடமாற்ற விண்ணப்பப்படிவத் தொகுதியைச் சமர்ப்பிக்கும் போது, பின்வரும் உப ஆவணங்களையும் தொடர் இலக்கத்தின் அடிப்படையில் இணைக்கவும்

i. இடமாற்ற விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் அனைத்து அதிபர்களினதும் தகவல்கள் (www.nspt.moe.gov.lk இணைப்பின் மூலம் **Login as a Zonal Director** உள்நுழைவு வழியாக நுழைந்து அனைத்து விண்ணப்பப் படிவங்களிலும் பரிந்துரையினை வழங்க முடியும்)

இதற்காக வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு **Username** மற்றும் **Password** அனுப்பி வைக்கப்படும்

கடவுச் சொல்லைப் (**Password**) பெற்றுக்கொள்வதற்கு 0112-784827 (அதிபர் கிளை) தொடர்பு கொள்ளவும்.

8. வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குக் கிடைக்கப்பெறும் அச்சிடப்பட்ட விண்ணப்பத் தொகுதியை வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம், திகதி மற்றும் பதவி முத்திரை பதித்து உறுதிப்படுத்தி PDF கோவையாக ஸ்கேன் (**Scan**) செய்து வழங்கப்பட்டுள்ள முகப்பின் ஊடாக முறைமைக்குப் பதிவேற்றம் (**Upload**) செய்தல் போதுமானது. (விண்ணப்பப் படிவங்களை எடுத்துக் கொண்டு அமைச்சிற்கு வருகை தருவது கட்டாயமானது அல்ல)

9. குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அப்பால், அதிபர்களால் நேரில் கொண்டு வரப்படும் அல்லது தபால் மூலம் அனுப்பப்படும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தனிப்பட்ட ரீதியில் சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆவணங்களும் எந்த அறிவிப்பும் இல்லாமல் நிராகரிக்கப்படும். இது தொடர்பாக இலங்கை அதிபர் சேவை அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

10. மேலதிக ஆலோசனைகள் அல்லது ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் அலுவலக நேரங்களில் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தவும்.

| | |
|---|---|
| இணையவழி முறை மூலம் அதிபர் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும்போது ஏதேனும் **தொழில்நுட்ப சிக்கல்** ஏற்பட்டால், தயவுசெய்து தரவு முகாமைத்துவக் கிளையைத் தொடர்பு கொள்ளவும். | **011-2806184** |
| அதிபர் கிளை | **011-2784827** |

11. இந்த வருடாந்த இடமாற்றச் செயன்முறையை அமுல்படுத்திய பின்னர், 2025 ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றத்தின் மூலம் நிரப்ப முடியாத தேசியப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் 2025 ஆம் ஆண்டு ஓய்வு பெறவுள்ளமையினால் வெற்றிடம் ஏற்படவுள்ள இலங்கை அதிபர் சேவையின் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்காக மாகாண சபைகளின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் பணியாற்றும் இலங்கை அதிபர் சேவை அதிகாரிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

12. வருடாந்த இடமாற்ற செயன்முறை - 2025 செயற்படுத்தப்பட்ட பின்னர், அதற்கு முன்னர் அதிகாரிகளால் அதிபர் கிளைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடமாற்ற விண்ணப்பங்கள் தொடர்பில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு ஊடாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

நாலக்க களுவெவ
செயலாளர்